# பெப்சிகோவின் நிம்பூஸ் தமிழகத்தில் அறிமுகம்

**சென்னை, ஆக. 9:**

**பெப்சி நிறுவனத்தின் அதிக விற்பனை ஆகும் பேகேஜ் எலுமிச்சை பழச்சாறு 7 ஆப் நிம்பூஸ் தற்போது தமிழகச் சந்தையில் அறிமுகமாகி உள்ளது.**

இதன் அறிமுக விழாவில் பெப்சிகோ இந்தியா நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் (ஃப்ளேவர்) அல்பனா டைடஸ், பெப்சிகோ இந்தியா நிறுவனத்தின் தென் சந்தைப் பிரிவு செயல் இயக்குனர் பிரதிக் போடா ஆகியோர் கூறியதாவது:-

வீடுகளில் தயாராகும் எலுமிச்சை பழச்சாற்றை உள்ளூர் சுவைக்கு ஏற்ப பிரபல பெப்சிகோ நிறுவனத்தின் செவன்அப் நிம்பூஸ் பிரத்யேகமாக உருவாக்கி உள்ளது. நிம்பூஸ் செவன் அப் சுவையான எலுமிச்சை பழச்சாறில் எந்தவிதமான செயற்கை நறுமணங்களின் கலப்பும் இல்லை. முழுக்க இயற்கை எலுமிச்சைகளால் தயாரிக்கப் பட்டுள்ளது.

'இந்தியாவில் அதிகமாக அருந்தப்படுவது எலுமிச்சை பழச்சாறு. பெப்சிகோ நிறுவனத்தின் தரத்துடன் வாடிக்கையாளர் விரும்பும் எலுமிச்சை பழச்சாறு செவன் அப் நிம்பூஸ் ஆக அறிமுகமாகிறது. உள்ளூர் சுவை மற்றும் தேவை களுக்கு ஏற்ப இதனை நாங்கள் கட்டுப்படியாகும் விலையில், சுகாதாரமான, வசதியான பேக்கிங்கில் தயாரித்துள்ளோம்.

தென் மண்டலச் சந்தையில் தமிழகம் எங்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். எங்கள் ஃப்ளேவர் பிராண்ட் தயாரிப்புகளுக்கு தமிழகம் என்றுமே மிகச்சிறந்த சந்தையாகத் திகழ்ந்து வருவதால் புதிய அறிமுகமான நிம்பூஸ் வாடிக்கையாளர்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெறும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நிம்பூஸ் எலுமிச்சை பழச்சாறை பயன் பாட்டிற்கு எளிதான, வசதியான பேக்கிங்கில்- 200 மிலி திரும்பித் தரும் கண்ணாடிபாட்டில் (ஆர்ஜிபி), 350 மிலி பெட் பாட்டில் மற்றும் 200 மிலி டெட்ரா பாட்டில் ஆகியவற்றில் ரூ. 10/- ரூ. 15/- மற்றும ரூ.20/- விலைகளில் உள்ளது.